# ‘முதலமைச்சர் கோப்பை போட்டி’ தமிழ்நாட்டின் ஒலிம்பிக்காக உருவெடுத்துள்ளது!

# தமிழ்நாட்டின் விளையாட்டு வீரர், வீராங்கனைகளை சாம்பியன்களாக உருவாக்குவதையும் - நிலையான விளையாட்டுக் கலாச்சாரத்தை வளர்ப்பதையும் உறுதி செய்வோம்!

## ‘தமிழ்நாடு விளையாட்டு மாநாடு – 2.0’ - 2025 ஐ தொடங்கி வைத்து –

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் உரை!

**சென்னை, டிச.18 –**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (16.12.2025) சென்னையில், விளையாட்டு வீரர் மேம்பாடு, பயிற்சி முறைகள், விளையாட்டு அறிவியல், விளையாட்டு ஊட்டச்சத்து, உளவியல், விளையாட்டு உலகில் செயற்கை நுண்ணறிவு, பயிற்சி மற்றும் உயர் செயல்திறன் சூழலியல், விளையாட்டுப் பகுப்பாய்வு, 2036 ஒலிம்பிக் தொலைநோக்குத் திட்டம், விளையாட்டு மருத்துவம் உள்ளிட்டவை குறித்து மாவட்ட விளையாட்டு அலுவலர்கள், பயிற்சியாளர்கள் மற்றும் முன்னணி விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு பயிற்சி அளிப்பதற்கான ‘தமிழ்நாடு விளையாட்டு மாநாடு 2.0 – 2025’ ஐ தொடங்கி வைத்தார்.**

**இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் அனைத்து விளையாட்டு விடுதி வீரர், வீராங்கனைகளுக்கான பயிற்சி, உடல்திறன், நல்வாழ்வு தரவுகளைக் கொண்டு செயல்திறன் பகுப்பாய்வு மற்றும் திட்டமிடுவதை அடிப்படையாகக் கொண்ட அத்லெட் மேலாண்மை அமைப்பையும் (ATHLETE MANAGEMENT SYSTEM) துணை முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.**

**இந்நிகழ்ச்சியில் துணை முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:**

*தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் முதன்மை முயற்சியாக தமிழ்நாடு விளையாட்டு மாநாடு 2.0 - 2025 ஐத் தொடங்கி வைப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.*

*முதலமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையில் அறிவித்ததன் அடிப்படையில் 5 கோடி ரூபாய் செலவில் அத்லெட் மேலாண்மை அமைப்பை இன்று உங்கள் முன்னிலையில் தொடங்கி வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். முதன்முறையாக விளையாட்டு வீரர்களின் பயிற்சி, நல்வாழ்வு, செயல்திறன் மற்றும் மருத்துவ விவரங்கள் குறித்த தரவுகளை திறன்வாய்ந்த டிஜிட்டல் தளத்தில் ஒருங்கிணைக்கின்றோம்.*

*இன்று இங்கு மதிப்புமிக்க விருந்தினர்களாக, இந்திய ஹாக்கி வீரர் பி.ஆர்.ஸ்ரீஜேஷ் மற்றும் இந்திய மகளிர் கிரிக்கெட் அணியின் புகழ்பெற்ற வீராங்கனை ஜி.கமலினி ஆகியோர் உள்ளனர்.*

*இந்திய ஆண்கள் ஹாக்கி அணியின் கேப்டனாகவும் கோல்கீப்பராகவும் ஸ்ரீஜேஷ் முக்கியப் பங்கு வகித்தார். அவரது சிறந்த கோல் கீப்பிங் திறமை காரணமாக ஹாக்கி ரசிகர்கள் அவரை “இந்திய ஹாக்கியின் சிறந்த தடுப்பு சுவர்” என்று அன்பாக அழைக்கிறார்கள்.*

*அவரது திறமை, தலைமைப்பண்பு மற்றும் எதிரணியினரின் பந்துகளை கோல் ஆகாமல் தடுத்தாடும் ஆற்றல் ஆகியவற்றால், இந்தியா டோக்கியோ 2020 மற்றும் பாரிஸ் 2024 ஒலிம்பிக் போட்டிகளில் வெண்கலப் பதக்கங்களை வென்றது. அவரது விளையாட்டு முறை மற்றும் அர்ப்பணிப்பு ஆகியவை நாடு முழுவதும் உள்ள லட்சக்கணக்கான விளையாட்டு ஆர்வலர்களைத் தொடர்ந்து ஊக்குவிக்கிறது.*

*இந்திய ஜூனியர் ஹாக்கி அணியின் பயிற்சியாளராக, சமீபத்தில் சென்னையில் நடைபெற்ற ஜூனியர் ஆண்கள் ஹாக்கி உலகக் கோப்பை 2025 போட்டியில் இந்திய அணி வெண்கலப் பதக்கம் வெல்ல அவர் வழிவகுத்தார்.*

*மிகவும் திறமையான பெண் கிரிக்கெட் வீராங்கனையான கமலினியை இன்று இந்த மேடையில் அமரவைப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். அவரது கடின உழைப்பின் காரணமாக, கமலினி 19 வயதுக்குட்பட்ட இந்திய பெண்கள் அணிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதன் பின்னர் இந்திய அணி உலகக் கோப்பையை வென்றது. இறுதிப் போட்டியில், போட்டியின் நாயகியாக உருவெடுத்து இந்தியாவையும் நமது தமிழ்நாட்டையும் பெருமைப்படுத்தினார்.*

*கடின உழைப்பு, ஒழுக்கம் மற்றும் ரசிகர்களின் நல்லாதரவுடன், பெரிய கனவுகள் உண்மையில் நனவாகும் என்பதை கிரிக்கெட் விளையாட்டில் அவரது பயணம் ஒவ்வொரு இளம் தடகள வீரருக்கும் எடுத்துக்காட்டாக திகழ்கின்றது. ஸ்ரீஜேஷ் மற்றும் கமலினி ஆகியோரின் எதிர்கால முயற்சிகள் வெற்றிபெற நான் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*2023 முதல், நமது தமிழ்நாட்டின் விளையாட்டுத் துறை வளர்ச்சியில் புதுமை சிந்தனைகள், கருத்துகள் மற்றும் செயல் திறன்களைப் பரிமாறிக் கொள்வதற்கான ஒரு சக்தி வாய்ந்த தளமாக ‘டாஸ்கான்’ உருவெடுத்து வருகிறது. விளையாட்டுத் துறையில் அடிமட்ட அளவில் மேம்பாடுகள், உயரமட்ட அளவில் செயல்திறன், அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், கொள்கை மற்றும் கூட்டாண்மைகள் போன்ற பல்வேறு காரணிகளில் ‘டாஸ்கான்’ கவனம் செலுத்துகிறது.*

*விளையாட்டுத்துறையை பொறுத்தவரைக்கும் முக்கியம் வாய்ந்த பல்வேறு நடவடிக்கைகளை நம்முடைய அரசு, நம்முடைய முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் படி தொடர்ந்து எடுத்து வருகின்றோம்.*

*‘முதலமைச்சர் கோப்பை’ போட்டி தமிழ்நாட்டின் ஒலிம்பிக்காக உருவெடுத்துள்ளது என்பதை நாங்கள் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறோம். நமது முதலமைச்சர் அவர்கள் முதலமைச்சர் கோப்பை போட்டிகளுக்கு பரிசுத் தொகையாக மட்டுமே 35 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து வழங்கினார். இந்த ஆண்டு சுமார் 15 லட்சம் பங்கேற்பாளர்கள் முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டியில் பங்கேற்றனர்.*

*முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டியின் மூலமாக கிராமப்புறங்களில் உள்ள விளையாட்டுத்துறை திறமையாளர்கள், முக்கியமாக மாற்றுத்திறன் வீரர்களையும் நாம் தொடர்ந்து அடையாளம் கண்டு வருகின்றோம்.*

*தமிழ்நாடு முழுவதும் விளையாட்டு உள்கட்டமைப்பை ஏற்படுத்த, நமது முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டின் அனைத்து தொகுதிகளிலும் தலா 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குறைந்தபட்சம் ஐந்து விளையாட்டு வசதிகளுடன் முதலமைச்சர் சிறிய விளையாட்டரங்கங்களை கட்டி வருகின்றார்.*

*2021 இல் நமது அரசு பதவியேற்ற பிறகு, தமிழ்நாடு பல தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டு பேட்டிகளை நடத்தி வருகிறது. சமீபத்தில், சென்னை மற்றும் மதுரையில் ஆண்கள் ஜூனியர் ஹாக்கி உலகக் கோப்பை போட்டியை நடத்தியுள்ளோம். அதேபோல், சென்னையில் SDAT ஸ்குவாஷ் உலகக் கோப்பை போட்டியை நடத்தினோம். இந்த போடடியில் இந்தியா சாம்பியனாகியது.*

*எப்படி சர்வதேச போட்டிகளை தமிழ்நாட்டில் வெற்றிகரமாக நடத்தி வருகின்றமோ, அதே மாதிரி, பல சர்வதேச போட்டிகளில் இன்றைக்கு தமிழ்நாட்டு வீரர்களும், வீராங்கனைகளும் தொடர்ந்து வெற்றிகளைக் குவித்து வருகிறார்கள், சாதனைகளை படைத்து வருகிறார்கள்.*

*நேற்றைக்கு Squash World Cupல் இந்திய அணியில் வெற்றி பெற்ற வீரர்கள் நான்கு பேரில், மூன்று பேர் நம்முடைய தமிழ்நாட்டைச் சார்ந்தவர்கள், அவர்கள் அத்தனைபேரையும் உடனடியாக முதலமைச்சர் அவர்கள் அழைத்து பாராட்டியிருக்கிறார்கள்.*

*அதே போல, உலக கோப்பை கேரம் போட்டியில், சென்னையைச் சேர்ந்த தங்கைகள் கீர்த்தனா, காசிமா, மித்ரா ஆகியோர் தொடர்ந்து பதக்கங்களைப் பெற்றிருக்கிறார்கள். சாதனைகளை படைத்து வருகிறார்கள்.*

*விளையாட்டு வீரர், வீராங்கனைகள் தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளில் பங்கேற்பதற்கு முன்பே, தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை மூலம் வீரர்களுக்கு நிதி உதவி வழங்கி வருகின்றோம். பதக்கங்களை வென்ற பிறகு, உயரிய ஊக்கத்தொகையையும் வழங்கி அவர்களை ஊக்குவிக்கிறோம்.*

*அதே போல, விளையாட்டுத்துறையில் சிறந்து விளங்குகின்ற விளையாட்டு வீரர்களுக்கு, Sports Quota-வில் 3 சதவீதம் இட ஒதுக்கீட்டின் மூலம், உடனடியாக அரசு வேலைகளையும் எவ்வளவு சீக்கிரம் முடியுமோ வழங்குகின்றோம்.*

*கடந்த ஆண்டு, தமிழ்நாட்டின் வரலாற்றில் முதல் முறையாக, 100க்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்களுக்கு பணியானைகளை வழங்கினோம். நமது முதலமைச்சர் அவர்கள் இந்த ஆண்டில் 25 பாரா-தடகள வீரர்கள் உட்பட குறைந்தபட்சம் 100 விளையாட்டு வீரர்களுக்கு அரசு வேலை வழங்க இலக்கு நிர்ணயித்துள்ளார்.*

*தமிழ்நாடு அரசு எடுத்த முயற்சிகள் பல்வேறு தரப்பினரிடமிருந்து அங்கீகாரத்தைப் பெற்று வருகின்றன. கடந்த வாரம், நமது அரசு, நமது விளையாட்டுத்துறை இரண்டு தொடர்ச்சியான விருதுகளைப் பெற்றதைப் தெரிவித்துக் கொள்வதில் பெருமைப்படுகிறேன். அவற்றில் ஒன்று CII இன் வணிக விளையாட்டு விருது 2025, இதில் தமிழ்நாடு “சிறந்த மாநில விளையாட்டு மேம்பாட்டு விருதை” பெற்றது.*

*சமீபத்தில், 3 நாட்களுக்கு முன்பு FICCI அவர்களின் Turf 2025 விளையாட்டு விருது வழங்கும் விழாவில் SDAT-க்கு சிறப்பு அங்கீகார விருதை வழங்கி சிறப்பித்தது. கடந்த மூன்று ஆண்டுகளில், விளையாட்டு மேம்பாட்டில் தமிழ்நாடு அரசின் செயல்திறனுக்காக விளையாட்டு மேம்பாட்டுத் துறை 6 விருதுகளைப் பெற்றுள்ளது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.*

*இது வெறும் நம்முடைய விளையாட்டுத் துறைக்கு கிடைக்கின்ற ஒரு விருதாக மட்டும் நாங்கள் நினைக்கவில்லை. நம்முடைய மாநிலத்திலிருந்து செயல்படுகின்ற, தொடர்ந்து சாதனைகள் படைக்கின்ற விளையாட்டு வீரர்களுக்கு கிடைக்கின்ற ஒரு அங்கீகாரமாகத்தான் நாங்கள் இந்த விருதுகளை பார்க்கின்றோம். ஆகவே, அதன் தொடர்ச்சியாகத் தான் இந்த கருத்தரங்கை 2வது வருடமாக தொடர்ந்து நடத்தி வருகின்றோம்.*

*அடுத்த இரண்டு நாட்கள், விளையாட்டுத் துறையிலுள்ள சிறந்த வல்லுநர்களால் வழிநடத்தப்படும் சிந்தனையைத் தூண்டும் குழு விவாதங்கள் இங்கே நடைபெற உள்ளன. விளையாட்டுத் துறையில் பெண்கள், பாரா விளையாட்டு, தடகள வீரர் பாதுகாப்பு மற்றும் விளையாட்டு உளவியல் உள்ளிட்ட பல்வேறு முக்கிய தலைப்புகளில் விவாதங்கள் நடைபெற உள்ளதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.*

*விளையாட்டு உள்கட்டமைப்பு, விளையாட்டு அறிவியல், கூட்டாண்மை, பயிற்சியின் முக்கியத்துவம் மற்றும் கொள்கை கட்டமைப்புகளை வலுப்படுத்துவதில் தமிழ்நாடு அரசு முழு உறுதியுடன் உள்ளது. விளையாட்டில் முன்னேற்றம் என்பது தனியாக அடைய முடியாது என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம். இது ஒரு குழு முயற்சியாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்த மாநாடு நடத்தப்படுகின்றது.*

*‘டாஸ்கான்’ என்பது சிந்தனைகள் மற்றும் கருத்துகள் செயலாகவும், நடைமுறை படுத்துவதற்கும் ஏற்ற ஒரு தளமாகும். இந்த இரண்டு நாட்களையும் சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்ளவும், வெளிப்படையாகக் கற்றுக்கொள்ளவும், புதுப்பிக்கப்பட்ட நோக்கத்துடன் தங்கள் இடத்திற்குத் திரும்ப வேண்டும் என இந்த நிகழ்ச்சிக்கு வந்துள்ள அனைத்து பங்கேற்பாளர்களையும் நான் கேட்டுக்கொள்கிறேன்.*

*தமிழ்நாட்டின் விளையாட்டு வீரர், வீராங்கனைகளை சாம்பியன்களாக உருவாக்குவதையும், நிலையான விளையாட்டு கலாச்சாரத்தை உருவாக்குவதையும் நாம் அனைவரும் ஒன்றாக உறுதி செய்வோம். ‘டாஸ்கான் 2025’ மிகப்பெரிய வெற்றியாக அமைய வாழ்த்துகிறேன்.*

*இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்தார்.*

*இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, இந்திய ஜூனியர் ஆண்கள் ஹாக்கி அணியின் பயிற்சியாளர் பி. ஆர். ஸ்ரீஜேஷ், இந்திய மகளிர் கிரிக்கெட் அணியின் வீராங்கனை ஜி. கமாலினி, விளையாட்டுத்துறை வல்லுநர்கள், சாதனை படைத்த வீரர், வீராங்கனைகள் மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய விடுதியைச் சேர்ந்த விளையாட்டு வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.*




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (16.12.2025) சென்னையில், விளையாட்டு உளவியல், விளையாட்டு உலகில் செயற்கை நுண்ணறிவு, பயிற்சி மற்றும் உயர் செயல்திறன் சூழலியல், விளையாட்டுப் பகுப்பாய்வு உள்ளிட்டவை குறித்து மாவட்ட விளையாட்டு அலுவலர்கள், பயிற்சியாளர்கள் மற்றும் முன்னணி விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு பயிற்சி அளிப்பதற்கான தமிழ்நாடு விளையாட்டு மாநாடு 2.0–2025 ஐ தொடங்கி வைத்து உரையாற்றினார்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திருப்பூர் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் பொதுக்கூட்டம் தேவனூர் – புதூர் அண்ணா திடலில் திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி தலைமையில் மாவட்ட அவைத் தலைவர், முன்னாள் எம்.எல்.ஏ., இரா.ஜெயராமகிருஷ்ணன், துணை செயலாளர் தி.சக்திவேல், பொருளாளர் கே.எம்.முபாரக் அலி, ஒன்றிய கழக செயலாளர்கள் க.செந்தில்குமார், எஸ்.கே.மெய்ஞானமூர்த்தி, எம்.ஏ.சாகுல் அமீது, தி.செழியன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக துணைப் பொதுச்செயலாளர், நாடாளுமன்ற மாநிலங்களவை குழுத் தலைவர் திருச்சி சிவா சிறப்புரையாற்றினார். இதில் கழக பொறியாளர் அணி துணை செயலாளர், முன்னாள் எம்.பி., கு.சண்முகசுந்தரம், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மகாலிங்கம், சி.சியாம் பிரசாத், சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் அ.தமிழ்மறை, செ.சாதிக் பாட்சா உள்பட கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



கழக கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை சார்பில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கோவையில் கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை துணை செயலாளர் மீனா ஜெயக்குமார் தலைமையில், மாநகர், மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை அமைப்பாளர் துரை கதிரவன் வரவேற்புரையில் நடைபெற்ற கருத்தரங்கத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் உரையாற்றினார். இதில் கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை தலைவர் வாகை சந்திரசேகர், முன்னாள் அமைச்சர் பொங்கலூர் நா.பழனிசாமி, மாவட்ட கழக செயலாளர்கள் தொண்டாமுத்தூர் ரவி (கோவை வடக்கு), தளபதி முருகேசன் (கோவை தெற்கு), மாநகர் மாவட்டப் பொறுப்பாளர் துரை.செந்தமிழ் செல்வன், மாவட்ட துணை அமைப்பாளர்கள் எஸ்.எம்.எஸ்.சுதாகரன், பூம்புகார் விஜய், பூங்குயில் பாபு, சீனிவாசன், ராஜசேகரன், மாநில நிர்வாகிகள் எம்.ஆர்.ஆர்.வாசு விக்ரம், வண்ணை அரங்கநாதன், தில்லை செல்வம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.